26 மார்ச் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு(உள்ளடக்கியது) பங்கெடுப்பு,(படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)



மாதாந்திர கருப்பொருள்:
குடும்பமும் இறைவேண்டலும்

நிகழ்வின் நோக்கம்:
உலக இறைவேண்டல் நாள் - தவக்காலம்

# கல்லறையை விட்டு வெளியே வா

இன்று நம் வாழ்க்கையில் என்ன புதியதாக இருக்கவேண்டும்? இந்த வாக்கியத்தை எப்படி நிறைவு செய்வீர்கள்? "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால், ________"?

நாம் புதிதாக ஆசைப்படும்போதெல்லாம் "இதுமட்டும் இருந்திருந்தால்" என்று நாம் சொல்வோம். இது மட்டும் இருந்திருந்தால் ________ இதை எவ்வாறு நிறைவுசெய்வீர்கள். இன்னும் நம்மை மேம்படுத்த முயற்சி செய்யும்போதெல்லாம் புதியதைத் தேடுகிறோம். சில நேரங்களில் துயரம், துக்கம், சோர்வு, குழப்பம் நம்மை மூழ்கடித்து, இன்னும் சிறப்பாக இருக்க விரும்புகிறோம். சில சமயங்களில் நம் வாழ்வில் புதியதைத் தேடுவோம்.

இன்றைய ஞாயிறு நற்செய்தியில் "கல்லை அகற்றிவிடுங்கள்" என்று இயேசு சத்தமாகக் கூறினார். மாறுவதற்கு நம்மில் தடையாய் இருக்கும் கற்கள் என்ன? **மாற்றத்தை உருவாக்க நம்மில் தடையாய் இருக்கும் கற்களை அகற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?** இதில் நமக்கு யார் உதவமுடியும்?

'இலாசரே வெளியே வா!' என்று இயேசு கூப்பிட்டார். வெளியே வருவதற்கும் புதிதாக உருவாக்கப்படுவதற்கும் முதல்படியாக, நாம் வெளியே வரவேண்டும். இயேசு இதுவரை செய்யாத எதையும் செய்யும்படி நம்மைக் கேட்கவில்லை. எனவே, நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி, (உரோ 6:4)அவரும் கல்லறையிலிருந்து முதலில் வெளியே வந்தார். "கட்டுகளை அவிழ்த்து, அவனைப் போகவிடுங்கள்" என்று இயேசு கூறினார். கட்டுகளை அவிழ்க்க நாம் விருப்பமில்லாமல் இருந்தால் எதையும் புதிதாக உருவாக்கமுடியாது.

நம் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரிடம் இருக்கும் தேவையற்ற கட்டுகள் என்னவென்று ஒவ்வொருவரும் ஒரு தாளில் எழுதி அதைப் பொருத்தமான இடத்தில் ஒரு பெட்டியில் போடச்செய்யவும். (பெயர் குறிப்பிடத் தேவையில்லை) இந்தக் கட்டுகளிலிலிருந்து நம்மை விடுவிக்க ஒவ்வொரு நாளும் இயேசுவிடம் மன்றாடுவோம். நம் குடும்பத்தை இயேசுவை நோக்கி கவனம் செலுத்த வைக்க இது ஒரு வழியாகும். ✜

மாற்றத்தை உருவாக்க நம்மில் தடையாய் இருக்கும் கற்களை அகற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

## இன்றைய வாசகங்கள்:

முதல் வாசகம்:
எசேக்கியேல் 27:12
"நானே ஆண்டவர்"

திருப்பாடல்: 130
"ஆண்டவரே, என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்"

இரண்டாம் வாசகம்:
உரோமையர் 8: 10
"கிறிஸ்து உங்களில் இருக்கிறார்"

நற்செய்தி:
யோவான் 11: 1-45
"லாசரே, வெளியே வா!"



*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 13/2023